www.newwisdomministries.com

கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி



## இணைய வார இதழ்

ஞானம் 6 - ஒலி 01 | 01-01-2023

# நன்றி.. நன்றி.. நன்றி..



# எல்லாப் புகழும் மூவொரு இறைவனுக்கே

## தலையங்கம்

அருட்பணி. சைமன் பீட்டர்





மூவொரு இறைவன் போற்றி. நமக்கு மற்றுமொரு புது வருடத்தை கொடுத்த அவரின் நாமம் வாழ்த்தப்படுவதாக.

எல்லாம் வல்ல பரிசுத்த பரலோகத் தந்தையை ஆராதிப்போம், நம் சகோதரரும், இறைமகனுமாகிய நம் அருள்நாதர் இயேசுவை ஆராதிப்போம், நம் வழித்துணையும், ஆருயிர் நண்பனாகிய பரிசுத்த ஆவியாரையும் நாம் ஆராதிப்போம்.

இறைத்துதியும், ஆராதனையும், நன்றியுமே மனித ஆன்மாவின் உயிரளிக்கும் மன்னாவாகும். இந்த வருடம் முழுவதும் அந்த மூவொரு இறைவனின் அருள் அனைவருக்கும் நிறைவாய் கிடைத்திட ஒருவர் ஒருவருக்காகச் செபிப்போம்.

ஞான ஒலி மின்னிதழ் வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத்தருணத்தில் எல்லாம் வல்ல இறைவனுக்கு நான் நன்றி கூறுகின்றேன். கடந்த ஆண்டு முழுவதும் இந்த ஞான ஒலி வார இதழையும், கத்தோலிக்கத் திருஅவையின் முதல் இணைய ஒலி இதழையும் ஒவ்வொரு வாரமும் உங்களுக்கு வழங்க இறைவனே முழு முதற் காரணம். அவரின் துணையின்றி இது சாத்தியமே ஆகியிருக்காது.

மாதப் பத்திரிக்கையை நடத்துவதே பெரும் சிரமம், ஆனால் ஞான ஒலி வார இதழை நடத்துவது ஒரு இமாலய வேலை, இதை எப்படி செய்கிறீர்கள், முடியுமா? எதற்கும் ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்துக் கொள்ளுங்கள் என்று அக்கறை கொண்ட என் நண்பர்கள் சொன்னார்கள்... ஆனால் இன்று ஞான ஒலியின் ஆறாவது வருடத்தின் முதல் இதழில் உங்களோடு உறையாடுவது, எங்களின், முக்கியமாக என் தனிப்பட்ட ஆற்றலல்ல... சக்தியல்ல... இவற்றை சாத்தியமாக்குவது நம் பரிசுத்த பரலோகத் தந்தைதான்.

ஆகவேதான் இந்தத் தலையங்கத்தின் முதல் வார்த்தையாக மூவொரு இறைவனின் நாமத்தை எழுதினேன். ஆனால் இந்த வார்த்தையை தட்டச்சு பண்ண முடியவில்லை...அந்த சாஃப்வேரில் என்னென்னமோ தட்டச்சு ஆகின்றது... அவ்வளவு தடங்கல்... சிறிது செபம் செய்த பிறகு எல்லாத் தடைகளும் நீங்கியது. இறைவன் இறைப்பணியில் உடனிருப்பதாக இயேசு பெருமான் சொன்னபடி உதவுகின்றார். ஆகவேதான், இந்த ஞான ஊழியங்கள் அனைத்தும் அவரின் கட்டளைகள், நம்மீது சுமத்தப்பட்ட கடமைகள். அவரின் பணிகளை அவரே வழிநடத்துவார்.

இப்பணி ஒரு கூட்டு முயற்சி. இறைவன் அனுப்பிய நல் உள்ளங்களின் கடும் உழைப்பால்தான் இவையெல்லாம் சாத்தியமாகின்றது. முக்கியமாக, இணையப் பணிகளுக்கு பேருதவியாக இருப்பவர், அருமை தம்பி திரு. சாமுவேல் பாண்டியன் அவர்கள். அவரின் எதிர்பார்ப்பில்லா உதவிகள் மிக முக்கியமானது.

அடுத்ததாக ஞான ஒலி இணைய இதழின் வடிவமைப்பாளர்கள் அருமை தம்பிகள் திரு. அந்தோணி ராஜ் (**Bosco Ads**) மற்றும் திரு. ஜோசப் (**Sharon Graphics**). இவர்களும் எந்தவித பிரதிபலனும் எதிர்பாராது ஒவ்வொரு வாரமும் அனைவரும் பாராட்டும்படி இதழை வடிவமைத்து கண்ணுக்கு விருந்து படைக்கும் அவர்களின் தன்னல சேவையால்தான் இந்த இதழ் பார்க்க அழகாகவும், தரமிக்கதாகவும் உள்ளது என்றால் அது மிகையாகாது. இந்த இதழ் சிறப்பாக வெளிவரவேண்டும் என்பதில் என்னைவிட அதிக சிரமம் எடுத்துக் கொள்கின்றனர்.

இந்த இதழ் இவ்வளவு அர்த்தமுள்ளதாகவும், கருத்துச் செறிவுமிக்கதாகவும் இருப்பதற்குக் காரணம், ஒவ்வொரு வாரமும் தங்கள் கட்டுரைகளை வழங்கிக் கொண்டிருக்கும் படைப்பாளிகள்தான் காரணம்.

அவர்கள் முறையே அருட்தந்தை. முனைவர். ஆ.அலெக்ஸ், அருட்தந்தை.ராபர்ட், அருட்தந்தை. ஸ்டீபன் கஸ்பார், அருட்தந்தை. ஸ்டேன்லி ராபின்சன், அருட்தந்தை. ஜஸ்டின் சேவியர் ராஜ், அருட்சகோதரி. தேவதிரவியம், அருட்சகோதரி. ஜெஸிந்தா ஜான்சன், அருட்சகோதரி. ரோஸி, திருவாளர். தீஸ்மாஸ் சேவியர், திரு.அம்புரோஸ், திருமதி. லீமா விக்டோரியா, திரு.வி.பி.ஆர் ஆகியோர் ஆவர்.

அடுத்ததாக, **Whatsapp** மூலமாக தினமும் நற்செய்திப் பணிகளை செய்ய பல பல மறைமாவட்டங்கள், துறவறச் சபைளைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் பல வருடங்களாக தங்களின் பொன்னான மறையுரைகளை தினமும் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஆங்கிலத்தில் **The Voice of the Gospel** என்றும் தமிழில் விவிலிய முழக்கம் என்ற பெயரிலும் அனுதினமும் நற்செய்திப் பகிர்வுக்கு அவர்களின் உதவியின்றி இது இயலாத காரியம்.

அடுத்தாக 2023 திருவழிபாட்டின் முதலாம் ஆண்டு, ஆகவே... இந்த ஆண்டிலிருந்து திருப்பலி வாசகங்களை முழுமையாக வழங்க ஒரு முயற்சி எடுத்திருக்கின்றோம். திருவழிபாட்டின் மூன்று ஆண்டுகளுக்கான மிகப் பெரிய பணி இது. இந்த முதலாம் ஆண்டிற்கான வாசகங்களை தமிழில் வாசித்து உதவி செய்பவர், அருட்சகோதி.தேவ திரவியம், அவர்கள். அதே போன்று ஆங்கிலத்தில் வாசகங்களை வாசித்து உதவுபவர், நியூயார்கில் புனித.ஜான் பல்கலைக்கழகத்தில் உயர் அதிகாரியாக இருக்கும் திருமதி. டெஃப்பி சேமார் அவர்கள். ஒருவாரத்திற்கு முன்னதாகவே அடுத்துவரும் வாரத்திற்கான வாசகங்கள் அனைத்தையும் பதிவு செய்து அனுப்பி பேருதவி செய்கின்றார்கள். **Divine Widom Ministries** நடத்தும் அடுத்த சிறப்பான பணி, இணைய வானொலி... ஞான வானொலியாகும். முதலில் அதில் 24 மணி நேரமும் கிறிஸ்தவப் பாடல்கள் மட்டுமே ஒலிபரப்பி வந்தோம். அதன் பிறகு புதுத் தொழில்நுட்பத்தின் உதவியால், பிரபலமான FM-கள் போல, நேரடியாக நேரலை நிகழ்ச்சிகளை வழங்கலாம் என்ற யோசனை வந்தது. அதன் அடிப்படையில் அதிகாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரைக்கும் ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கு ஒருவர் வீதமாக நிகழ்ச்சிகளைக் கொடுக்க ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு மேலாகின்றது. அது தொடர்கின்றது...

இப்படி நேரலையாக நிகழ்ச்சிகளை வழங்குவது ஒரே இணைய வானொலி நம் ஞான வானொலி மட்டுமே. இறைவனின் மகிமைக்காக.

இதில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் பலர் அருமையாக நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றார். இவர்களில் ஒருவர்கூட எந்தவிதமான பணப்பலனை எதிர்பார்ப்பதில்லை. இறைவனின் அதிமிக மகிமைக்காக இப்பணியை தங்களின் அன்றாடப் பணிகளோடு, பல சிரமங்களுக்கு மத்தியில் செய்துவருகின்றார்கள்.

இந்த இணைய வானொலியின் மாதாந்தர இணைய செலவிற்கு ஒவ்வொரு மாதமும் உதவி செய்கின்றவர்கள் திரு.மைக்கேல் சாமுவேல், திருமதி. டெஸ்ஸி சாமுவேல், திருமதி. நிக்கித்தா பாண்டா, திரு.பாண்டா நிக்கித்தா, மற்றும் திருமதி. வினிதா.

மற்றும் அவ்வப்பொழுது இப்பணிகளுக்காக ஒரு சிலர் சிறு சிறு நன்கொடைகளைக் கொடுத்திருக்கின்றார்கள்.

ஞான வானொலியில் ஆர்.ஜேக்களாக அனுதினமும் நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருப்பவர்களை இங்கு நான் குறிப்பிட வேண்டும். அதிகாலை 5 மணியிலிருந்து நிகழ்ச்சிகளை வழங்குபவர்கள்...

| | |
|---|---|
| 05.00 am | Mr. John Santhappan – இன்றைய திருப்பலி வாசகங்கள் |
| 05.30 am | Mrs. Leema – துயில் களைந்து தூயவரைத் துதிப்போம். |
| 06.00 am | விவிலிய முழக்கம் |
| 06.15 am | The Voice of the Gospel - Reflection in English |
| 06.30 am | Mrs. Viji Bernard – ஜெகம் ஆளும் ஜெபமாலை |
| 07.00 am | Mr. Joseph William– மனமாச்சரியங்கள் |
| 07.30 am | Mr. James Franklin – இன்றைய இறைச்சிந்தனை |
| 08.00 am | Dr. Jasmin – நலம் தரும் நற்சிந்தனை. |
| 08.30 am | Rev. Sr. Juliana - Spiritual Message in English |
| 09.00 am | Mr. Ronald Rosaio – இருள் நீக்கும் ஞான வெளிச்சம் |
| 09.30 am | Mrs. Pradeebha Vijay - Praise and Worship in English |
| 10.00 am | Mrs. Gracy John Paul – விவிலிய வாசிப்பு – பழைய ஏற்பாடு |
| 10.30 am | Mr. Antony Cruz – விவிலிய வாசிப்பு – புதிய ஏற்பாடு |
| 11.00 am | Mrs. Jessy, Mrs. Beula Emerald – வல்லமைதரும் ஜெபமாலை |
| 11.30 am | Rev. Sr. Deva Dhiraviam – குடும்ப நலவாழ்வு |
| 12.00 Noon | Rev. Fr. Justin – சிகரத்தை நோக்கி |
| 12.30 pm | Mr. Esron – இன்றைய புனிதர் |
| 13.00 pm | Mr. Alphonse – ஞானத்தின் பொன்மொழிகள் |
| 13.30 pm | Mr. Johnpaul Jeeva – பொன் மனங்களின் வாழ்க்கைக் குறிப்புகள் |
| 14.00 pm | Mrs. Lawrence Rathinam – புனிதமாக்கும் ஜெபமாலை |
| 14.30 pm | Rev. Sr. Pushpa – இறைஇரக்க ஜெபமாலைமன்னன் இயேசுவின் மகிமை |
| 15.00 pm | Mrs. Vijaya – இறைஇரக்க ஜெபமாலை |
| 15.30 pm | Rev. Bro. Mummalar Chelvan – சிலுவைப்பாதைச் சிந்தனைகள் |
| 16.00 pm | Mr. Dominic, Mrs. Nirmala – அன்புமயமாக்கும் அன்பியம் |
| 16.30 pm | Rev. Sr. Nirmala – ஆன்மீக அனுபவங்கள் |
| 17.00 pm | Sr. Jone of Arc - (பெண்ணின் மாண்பு) + Sr. Rosy. FSPM - Society and the Law |
| 17.30 pm | Rev. Sr. Catherine – தித்திக்கும் திருப்பாடல்கள் |
| 18.00 pm | Mr. Maria Joseph – மகிமைதரும் ஜெபமாலை |
| 18.30 pm | Mr. Princy – கொஞ்ச நேரம் கதைக்கலாம் |
| 19.00 pm | Mr. Michael, Mrs. Daisy - The Holy Bible Reading in Hindi |
| 19.00 pm | Mr. Michael, Mrs. Daisy - The Holy Bible Reading in English |
| 19.30 pm | Miss. Jerona – 19.30 விவிலிய முத்துக்கள். |
| 20.00 pm | |
| 20.30 pm | Mr. Arokiaraj – சிறுவர் மறைக்கல்வி |
| 21.00 pm | Mr. Savarimuthu from Dubai – வல்லமைதரும் ஜெபமாலை |
| 21.30 pm | Fr. Jayaraj - Bangalore – நல்லிரவுச் சிந்தனை |
| 22.00 pm | William Jeyakumari – நாளைய திருப்பலி வாசகங்கள் |

இதே போன்று இணைய தொலைக்காட்சியையும் ஆரம்பிக்கலம் என்று அதற்கான ஆயத்தப் பணிகளை செய்து கொண்டிருக்கின்றோம். இறைவன் துணையோடு இதுவும் சாத்தியமாக எங்கள் அனைவருக்காகவும் செபிக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அதற்கான மாதாந்தர செலவும் மற்ற செலவும் அதிகமாக இருக்கும். இறைவன் துணை செய்வார்.

இந்த அருமையான தருணத்தில் டிவைய்ன் விஸ்டம் மினிஸ்ட்ரீஸின் பணிகளுக்கு உதவுகின்ற அனைவருக்கும் இந்த இதழின் வழியாக என் இதயப்பூர்வ நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

முக்கியமாக இந்த ஆண்டு ஒரு வீடியோ கேமரா வாங்க பொருளுதவி செய்தவர்களுக்கு இதயப்பூர்வமான நன்றிகள். அவர்கள் தங்கள் பெயரை வெளியிட விரும்பமாட்டார்கள் என்பதற்காக அவர்களின் பெயர்களை இங்கு குறிப்பிடவில்லை.


இவர்கள் அனைவருக்கும் வருடத்தில் ஒரு நாள் அவர்களுக்கு ஒரு நல்ல விருந்தும், ஒரு சிறிய நினைவுப் பரிசும் வழங்குவேன். இந்த ஆண்டு அதை என்னால் செய்ய முடியவில்லை. காரணம்... நிதிநிலை...


ஆனால் இறைவன் அவர்களை பண்மடங்காக ஆசீர்வதிப்பார்.

அவர்களை இறைவன் அபரிமிதமாக ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாம் அனைவரும் சிறப்பாக செபிப்போம். இறைவன் தம் ஒப்பற்ற செயல்வத்தைக் கொண்டு அவர்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வாராக என்று பிலிப்பியர் 4:19ல் கூறிவதுபோல நாமும் வாழ்த்துவோம். அதற்காக செபிப்போம். ஆமென். அனைவருக்கும் நன்றிகள்.

We look back and Thank God.
We look forward to and
Trust God.

HAPPY NEW YEAR
TO ALL!





# விவிலியம் அறிவோம்-71

அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## உடன்படிக்கை விதிகள் (தொடர்ச்சி)

இந்த வாரமும் உடன்படிக்கை விதிகளையே தொடர்ந்து சிந்திப்போம். வன்முறைச் செயல்களுக்கான சட்டங்களில் மரணதண்டனைக்குரிய குற்றங்களைப் பற்றி நாம் ஏற்கனவே பார்த்தோம். மரண தண்டனை இல்லாமல் வேறு தண்டனைகள் பெறக்கூடிய வன்முறை செயல்களிலிருந்து இன்று நாம் தொடங்குவோம். இருவர் சண்டையிடும்போது ஏற்படுகின்ற காயங்களினால் ஒருவன் வேலை செய்யமுடியாமல் படுக்கையில் இருக்க நேரிட்டால் இழப்பீடு வழங்கவேண்டும் மற்றும் மருத்துவச் செலவையும் ஏற்கவேண்டும் என சட்டம் கூறுகிறது. ஏனைய மேற்காசிய நாடுகளின் சட்டங்களிலும் இத்தகைய தண்டனைகள்தான் கொடுக்கப்பட்டன. உடன்படிக்கை விதிகளில் காயப்படுத்தியவர்களுக்குக் கிடைக்கும் தண்டனை ஏனைய மேற்காசிய நாடுகளில் உள்ள தண்டனையைவிட வித்தியாசமாக உள்ளது. காயம்பட்டவன் பிழைத்துக்கொண்டால் காயப்படுத்தியவன் தண்டிக்கப்படுவதில்லை. அமுராபி சட்டத்தில் தண்டனை அல்லது இழப்பீடு கொடுப்பது ஒருவனின் சமூக அந்தஸ்தைப் பொறுத்து மாறுபட்டது. இத்தியர்களின் சட்டத்தில் காயப்படுத்தியவன் காயம்பட்டவனுடைய வீட்டுக்குச் சென்று அவன் நலம் பெறுவதுவரை அவனுடைய வேலைகளைச் செய்யவேண்டும். இஸ்ரயேலரின் சட்டங்களில் அடிமைகளின் உரிமையாளர்கள் அடிமைகளை நடத்தும் முறையில் சில வரையறைகள் இருந்தன. உரிமையாளர் அடித்ததால் ஒரு அடிமை இறந்துவிட்டால் உரிமையாளர் பழிவாங்கப்படுவார்; ஆனால் உரிமையாளர் அடித்து அடிமை இறக்காமல் பிழைத்துக்கொண்டால் உரிமையாளர் தண்டிக்கப்படுவதில்லை. ஏனெனில் அடிமை உரிமையாளரின் சொத்து ஆவார். எனவே அடிமைகளைப் பொறுத்தவரையில் மனித உரிமைகளில் சில குறைபாடுகள் இருந்தன எனக் கூறலாம்.

கர்ப்பிணி பெண்கள் பேறுகாலத்திற்குமுன் பிரசவம் ஏற்படுவதற்குக் காரணமாக இருப்பவர்களைத் தண்டிப்பது பண்டைய காலத்தில் பழக்கத்தில் இருந்தது.ஒரு கர்ப்பிணிப் பெண் தாக்கப்பட்டு, அவளுக்கு கருக்கலைப்பு ஏற்பட்டால் அல்லது குழந்தை இறந்து பிறந்தால் அதற்குக் காரணமானவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அதற்கு இழப்பீடும் வழங்கப்படவேண்டும். அதற்கான இழப்பீடு அந்தப் பெண்ணின் சமூக அந்தஸ்தைப் பொறுத்து அமைந்திருந்தது. அமுராபி சட்டத்தில் அந்தப் பெண் அடிமையாக இருந்தால் ஒரு சிறிய இழப்பீடு தொகை கொடுப்பதுடன் முடித்துவைக்கப்பட்டது. இடைக்கால அசீரியர்களின் சட்டத்தில் ஒரு பெண்; பேறுகாலத்திற்குமுன் பிரசவம் ஏற்பட காரணமாயிருக்கிறவனுக்கு ஐம்பது கசையடிகள் கொடுக்கப்பட்டன. அத்துடன் அவனுடைய ஒரு மாதச் சம்பளம் அந்தப் பெண்ணுக்கு இழப்பீடாகக் கொடுக்கப்படவேண்டும். சுமேரியச் சட்டங்களைப் பொறுத்தவரை எதிர்பாராமல் நடக்கும் நிகழ்வுக்கு ஒரு சிறிய தொகை இழப்பீடாகவும், வேண்டுமென்றே செய்தால் பெரிய தொகை இழப்பீடாகவும் கொடுக்கப்பட்டது. உடன்படிக்கை விதிகளில் அந்தப் பெண்ணுக்கு ஏற்படும் காயத்தைப் பொறுத்து இழப்பீடு தீர்மானிக்கப்பட்டது. அவளது கரு கலைந்தால் அவளுடைய கணவன் கேட்கின்ற இழப்பீடு அல்லது நீதித்தலைவர்கள் கூறுகின்ற இழப்பீடு கொடுக்கப்படவேண்டும். இந்தச் சட்டங்களைப்

பார்க்கும்போது இஸ்ரயேல் மக்கள் ஒரு குழந்தை கருத்தரித்த நேரத்திலிருந்தே அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. கிறிஸ்தவர்களின் வரலாற்றிலும் தொடக்கத்திலிருந்தே ஒரு கரு தாயின் வயிற்றில் உருவாகும் நேரத்திலிருந்தே ஒரு உயிராகப் பார்க்கப்பட்டது. இதனால் கருக்கலைப்பு மனித உயிரைக் கொலை செய்யும் குற்றமாகக் கருதப்பட்டது.

உடன்படிக்கை விதிகள் கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இந்தக் கோட்பாட்டின் நோக்கம் பொருத்தமான பதிலைக் கொடுப்பதாகும். ஒரு இழப்பை அதற்கு ஈடான இழப்பின் மூலம் சரிசெய்வதாகும் (காண் லேவி 24:10-20). ஒருவன் இன்னொருவனால் காயப்படுத்தப்படும்போது காயப்படுத்தியவனும் அதற்கு இணையான காயத்தைப் பெறுவதுதான் நீதியாகக் கருதப்பட்டது. மேலோட்டமாகப் பார்த்தால் இவ்வகைத் தண்டனைகள் கடுமையானவையாகத் தெரியலாம். ஆனால் இந்த நடைமுறை குற்றவாளி அதிகத் தண்டனைக்கு உள்ளாக்கப் படாமலும் பாதுகாக்கிறது. மேலும் இந்தத் தண்டனைகள் பெரும்பாலும் அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டன. உதாரணமாக,ஒருவனுடைய கையை இன்னொருவன் வெட்டிவிட்டால் வெட்டப்பட்டவனின் கைக்கு ஈடாக பெரிய அபராதத் தொகையை அவன் கட்டவேண்டி இருந்தது. ஒவ்வொரு குற்றத்திற்கும் அபராதத்தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கலாம். குற்றங்கள் அதிகமாக நடைபெறுவதைத் தடுப்பதற்காகவும் இத்தகைய தண்டனைகள் வழங்கப்பட்டன எனலாம். பண்டைய மேற்காசிய நாடுகளில் தனிமனித பொறுப்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஒரு மனிதனை, அவனது வேலை செய்யும் ஆற்றலைப் பாதுகாதுகாப்பதற்கு பல சட்டங்கள் இருந்தன. உதாரணமாக,ஒருவன் தனது கையினாலோ அல்லது அவனுக்குச் சொந்தமான ஒரு பொருளாலோ, விலங்கினாலோ இன்னொருவனின் பணி செய்யும் திறத்தை முடக்கிவிட்டால் அதற்குச் சரியான ஈடுகொடுக்கவேண்டும். கொம்பினால் குத்தும் பழக்கமுள்ள ஒரு மாட்டை உதாரணமாகக் கூறலாம். உடன்படிக்கை விதிகளில் ஒருவருடைய மாடு குத்தியதால் இன்னொருவர் இறந்துவிட்டால் அந்த மாடு கொல்லப்படவேண்டும்; மாட்டின் உரிமையாளரும் கொல்லப்படவேண்டும். இதைப்போல இன்னும் பல சட்டங்கள் உள்ளன.

ஒரு உரிமையாளரின் கவனமின்மையால் ஆபத்துகள் ஏற்பட அதிகமான வாய்ப்புகள் உள்ளன. உதாரணமாக, வீட்டில் வளருகின்ற வெறிபிடித்த நாய்கள், சரியான முறையில் கட்டப்படாத கட்டடங்கள், வீட்டில் வளர்க்கப்படும் கொடிய விலங்குகள் போன்றவற்றைக் கூறலாம். இவைகளால் அடுத்தவர்களுக்கு ஆபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. எனவே அவற்றின் உரிமையாளர்கள் அவற்றைப் பொறுப்புடன் பார்த்துக்கொள்ளவேண்டும். இத்தகையை குற்றங்கள் யார் அல்லது எது காயப்படுத்தப்பட்டது என்பதைப் பொறுத்து தண்டனைகள் வழங்கப்பட்டன. ஒர் அடிமையின் உரிமையாளர் அடிமையை அடித்துத் அவனுடைய கண்ணையோ அல்லது பல்லையோ இழக்கச் செய்தால் அடிமை விடுதலை செய்யப்படவேண்டும்.எந்த இழப்பீட்டையும் அடிமை உரிமையாளருக்குக் கொடுக்கவேண்டியதில்லை. ஒருவேளை அந்த அடிமை இறந்துவிட்டால் சூழ்நிலைகளை வைத்து அதற்கான தண்டனைகள் தீர்மானிக்கப்பட்டன. சாவுக்கான சூழ்நிலை இருப்பது தெரிந்தும் அந்த உரிமையாளர் எதுவும் செய்யவில்லையென்றால் உயிருக்கு உயிர் கொடுக்கப்படவேண்டும். அதைப்போல விலையுயர்ந்த அல்லது முக்கியமான விலங்குகள் காயப்படுத்தப்பட்டாலோ, கொல்லப்பட்டாலோ அவற்றிற்கு இணையான இழப்பீடு வழங்கப்படவேண்டும். அரசு அதிகாரிகள் தனிமனித உரிமைகளை மதிக்க வேண்டும். தனி மனிதர்களின் தேவைகளை தீர்த்து வைப்பதன் வழியாகத்தான் அதிகாரிகள் பொது நலத்தை பேணிப் பாதுகாக்க முடியும். இயற்கைச் சட்டங்களுக்கு நிர்வாகம் மதிப்பளித்து செயல்படும்போதுதான் அதிகாரம் சரியான முறையில் செயல்படுத்தப்படுகிறது எனக் கூற முடியும். பொதுமக்களும் அதிகாரிகளுடன் ஒத்துழைத்து அதிகாரிகள் உண்மை, நீதி, ஒத்துழைப்பு மற்றும் விடுதலையைப் பேணிக்காப்பதற்கு ஒத்துழைக்கவேண்டும்.

பண்டைய மேற்காசிய நாடுகளில் களவு என்பது சட்டத்திற்குப் புறம்பாக சொத்துக்களை அபகரித்துக் கொள்வதாகும். அன்றைய சமூகத்தில் களவு ஒரு பெரிய பிரச்சினையாகவே இருந்திருக்கிறது. அது சம்பந்தமாக பல சட்டங்கள் இருப்பது இதை உறுதி செய்கிறது. திருடுதல், கொள்ளையடித்தல் போன்றவை அதிகமாக இருந்தன. திருடுவதற்கான தண்டனைகள் திருடப்பட்ட சொத்தின் உரியாளர் யார்? திருடப்பட்ட பொருள் அல்லது சொத்தின் மதிப்பு என்ன? என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. பெரும்பாலான நேரங்களிலும் ஒருவனுக்கு உரிமையான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டால் அல்லது அழிக்கப்பட்டால் அதற்கான இழப்பீடு அந்தச் சூழ்நிலை அல்லது ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. இழந்த சொத்தை, உதாரணமாக, விலங்குகள், தானியங்கள், விளைச்சலை முடக்குதல், நிலம் அல்லது தோட்டங்கள் சேதமாக்கப்படுதல் அல்லது அவை எந்த விளைச்சலையும் கொடுக்கமுடியாமல் செய்தல் போன்றவற்றை கணக்கிட்டு இழப்பீடு மதிப்பிடப்பட்டது. ஒருவரின் அலட்சியத்தால் ஏற்படும்

இழப்புகளுக்கும் இழப்பீடு கொடுக்கவேண்டிய கட்டாயம் இருந்தது. உதாரணமாக, அலட்சியத்தால் பரவுகின்ற நெருப்பு, வெறித்தனமான விலங்குகள் போன்றவற்றைக் கூறலாம். இவற்றால் ஏற்படக்கூடிய இழப்புகள் கணக்கிடப்பட்டு இழப்பீடுகள் பெறப்பட்டன. சில நேரங்களில் இந்த இழப்பீட்டுத் தொகையை நீதிஅரசர்களே தீர்மானிப்பார்கள். சொத்துக்கள் இழப்பிற்கு மரணதண்டனை எப்போதும் வழங்கப்படவில்லை. இந்தச் சட்டங்களின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் இழப்பைச் சந்தித்தவன் இழப்பீடு பெறவேண்டும் என்பதுதான். இழப்பீடுதான் தண்டனை. இதில் இழப்பீடு இழப்பைவிட அதிகமாக இருந்தது. உதாரணமாக, ஆட்டையோ மாட்டையோ ஒருவர் திருடி வெட்டிவிட்டால் அல்லது விற்றுவிட்டால் ஒரு மாட்டுக்கு ஐந்து மாடு என்றும், ஓர் ஆட்டுக்கு நான்கு ஆடு என்றும் ஈடுகட்டுவர் (விப 22:1); திருடன் திருட்டுக்கு ஈடாகக் கொடுப்பதற்கு அவனிடம் எதுவும் இல்லையெனில் அவர் விற்கப்படவேண்டும் (விப 22:3). சொத்துக்களை பாதுகாக்கவும் மனித உரிமைகளை காக்கவும் மனிதர்களுக்கு உரிமை இருந்தது. இரவில் ஒருவன் திருடுவதற்காக ஒரு வீட்டில் நுழைந்து திருடுகையில் உரிமையாளர் அவனைத் தாக்கி கொன்றுவிட்டால் அது தற்காப்பிற்காக செய்யப்பட்ட செயல் எனக் கருதப்பட்டது.

உடன்படிக்கை விதிகளில் பெரும்பாலானவைச் சமூகத்தை மையமாகக் கொண்டு அமைந்திருந்தன. பல சட்டங்கள் ஒழுக்க நெறிகள் பற்றிப் பேசுகின்றன. உதாரணமாக திருமணம் பற்றியச் சட்டங்களைக் கூறலாம். பொதுவாக திருமண ஒப்பந்தங்களை குடும்பத்தினரே பேசிமுடிப்பர். மணகமகனின் குடும்பம் மணமகளின் குடும்பத்திற்குப் பரியம் கொடுக்கும் பழக்கம் இருந்தது. மணமகனின் தந்தை மணமகளின் தந்தைக்கு பரியம் கொடுப்பதென்பது மணமகளை விலைக்கு வாங்குவதாகாது. மாறாக மகளை இழக்கும் தந்தைக்கு கொடுக்கப்படும் இழப்பீடாகக் கருதப்பட்டது. ஒருவன் கன்னிப்பெண் ஒருத்தியுடன் உறவுகொள்வது தடைசெய்யப்படவில்லை; ஆனால் அது ஒழுக்கக் கேடாகக் கருதப்பட்டது. திருமணத்திற்குமுன் உடலுறவு கொள்வது பல காரணங்களுக்காக ஊக்குவிக்கப்படவில்லை. ஏனெனில் இது திருமண ஒப்பந்தத்தை பேசி முடிக்கும் தந்தையின் அதிகாரத்தை அபகரிக்கிறது. மேலும் பரியத் தொகையை குறைக்கிறது. இவ்றின் காரணமாக திருமணத்திற்கு முன் உடலுறவு கொள்வது ஊக்குவிக்கப்படவில்லை. சூனியம் வைத்தல், விலங்குகளுடன் புணர்தல், வேறு தெய்வங்களை வழிபடுதல் போன்றவை தண்டிக்கப்படவேண்டிய குற்றங்களாகப் பார்க்கப்பட்டன. சமூகத்தில் பலவீனமானவர்களாகக கருதப்பட்டவர்கள், குறிப்பாக வெளிநாட்டினர், கைம்பெண்கள், அநாதைகள் மேல் அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டன. அதற்கு முக்கியமான காரணம் அவர்களுக்கு இஸ்ரயேலர் அனுபவித்த உரிமைகள் கொடுக்கப்படவில்லை. அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள்; சமூகத்தின் விளிம்பு நிலைகளில் வாழ்பவர்களாக இருந்தார்கள். சமூகச் சட்டங்கள் கடவுளை ஒடுக்கப்பட்டவர்களின் கடவுளாகச் சித்தரிக்கின்றன.

உடன்படிக்கை விதிகள் பொய்சாட்சி சொல்வதை தடை செய்கிறது. குறிப்பாக, ஏழை, எளியவர்கள், குற்றமற்றவர்கள் மற்றும் நேர்மையாளர்கள் பாதிக்கப்படும் வகையில் பொய்சாட்சிகள் சொல்வது தவிர்க்கப்படவேண்டும். உன்மேல் வெறுப்பு கொண்டவர்களுக்கு நன்மை செய்வதுதான் முறையானது என்ற கருத்து கூறப்படுகிறது. எனவே நீதியை மட்டுமே அவர்கள் நாடவேண்டும். நீதிக்கு எதிராகச் செய்யப்படும் அனைத்தையும் தவிர்க்கவேண்டும். ஆனால் வரலாற்றைப் பார்க்கும்போது இஸ்ரயேல் மக்கள் நடுவில் அநீதிகள் மலிந்து கிடப்பதை இறைவாக்கினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அநீதிகளுக்கு எதிரானவர்களாக, குரலற்றவர்களின் குரலாக இறைவாக்கினர்கள் செயல்படுகின்றனர். ஓய்வு நாள், ஓய்வு ஆண்டு போன்றவை கொண்டாடப்படுதலிலும் அடிமைகள், வெளிநாட்டினர், மற்றும் விலங்குகளும் ஓய்வு பெறவேண்டும் என்ற எண்ணம் இருப்பது தெரிகிறது. உதாரணமாக, வேலை செய்யாமல் விலகியிருந்து ஓய்வெடுப்பதற்கு ஓய்வு நாள் ஏழைகளுக்கு வாய்ப்பளிக்கிறது. ஓய்வு நாளின் தொடர்ச்சிதான் ஏழாம் வருட ஓய்வு ஆண்டு. ஓய்வு ஆண்டு நிலங்கள் வெறுமையாக விடப்படுவதால் அதில் விளைகின்ற பொருள்களால் ஏழைகள் பயன்பெறுவர். எனவே, ஓய்வு ஆண்டு குறிக்கப்பட்ட காலத்தில் பின்பற்றப்படவேண்டும். இஸ்ரயேல்; மக்கள் வேறு தெய்வங்களை வழிபடுவதைத் தவிர்க்கவேண்டும். அதற்கு இடையூறாக இருப்பவரகளுடன் உறவு கொள்வதைத் தவிர்க்கவேண்டும். பண்டைய மேற்காசிய நாடுகளின் உடன்படிக்கை பத்திரங்கள் ஆசிர் மற்றும் சாபங்களுடன் முடிவடைந்தன. உடன்படிக்கை விதிகளும் அவ்வாறுதான் முடிவுக்கு வருகின்றன. உடன்படிக்கை விதிகளுக்குப் பிரமாணிக்கமாக இருப்பவர்கள் ஆசிரால் நிரப்பப்படுவார்கள். உடன்படிக்கை விதிகளுக்கு பிரமாணிக்கம் இல்லாமல் இருந்தால் அவர்கள் சபிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். உடன்படிக்கை விதிகளின் இறுதிப்பகுதி (விப 22:20-33) ஆசிர்களையும் சாபங்களையும்கொண்டுள்ளன.

பயணம் தொடரும்...

இறைவனின் அன்னையாகிய

தூய கன்னி மரியா பெருவிழா

புத்தாண்டுப் பெருவிழா

ஜனவரி 1-2023



மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ராபர்ட்**

உதவிப்பங்குத்தந்தை

**புனித.விண்ணரசி அன்னை ஆலயம்**

மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்

| | |
|---|---|
| முதல் வாசகம் | **எண்ணிக்கை 6:22-27** |
| இரண்டாம் வாசகம் | **கலாத்தியர் 4:4-7** |
| நற்செய்தி வாசகம் | **லூக்கா 2:16-21** |

# நாயிறு மறையுரை

## தாயாவோம்

ஒரு முறை பேருந்திலே நான் கண்ட காட்சி. பேருந்து நகர்ந்து செல்ல பயணிகளின் கூட்டமும் அதிகமாகிறது. அந்த பேருந்தில் தாய் ஒருவர் தன்னுடைய கைக்குழந்தையோடு ஏறுகிறாள். இதைப்பார்த்த சக பயணி அந்த தாயின் சிரமத்தைப் போக்க தாயின் கையிலிருந்த அந்த குழந்தையை வாங்கி அவரது மடியில் வைத்துக்கொள்கின்றார். பேருந்து நகர நகர பயணிகளின் கூட்டத்தால் தாயுக்கும் குழந்தைக்கும் உள்ள இடைவெளியானது மறைந்து போகின்றது. தாயானவளை காணவில்லையே என நினைத்த குழந்தை ஓ என அழுதது. தன் குழந்தையின் அழுகுரலைக் கேட்ட தாயானவள் கூட்டத;தை ஒதுக்கி தன் முகத்தைக்காட்ட குழந்தை தாயை அடையாளம் கண்டு அழுகுரல் நின்று போகின்றது. ஒரு சாதாரண தாயானவள் தன் குழந்தையை அறிந்திருக்கிறாள் எனில் கடவுளின் தாயானவள் நம்மை எப்படி அறிந்து வைத்திருப்பாள்? அப்படிப்பட்ட கடவுளின் தாயைத்தான் இன்று திரு அவை நினைவு கூறுகிறது.

உலக வரலாற்றில் எத்தனையோ தாய்மார்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்திருந்தாலும் ஒரு பெண் மட்டும்தான் இறைவனின் தாய் என்று அழைக்கப்படுகின்றாள். அவள்தான் முப்பொழுதும் கன்னியாக எப்பொழுதும் அன்னையாக விளங்குகின்ற கன்னிமரியாள். இவருக்கு மட்டும் ஏன் இப்பேர்பட்ட சிறப்பு? இறைவனுக்கு தனது வாழ்வில் முதலிடம் கொடுத்து அவரிடம் மட்டுமே இன்பத்தைத் தேடிவாழ்ந்த பெண்ணொருத்தித் தேவைப்பட்டாள். அந்தத் தேவையை நிறைவு செய்து அருள் நிறைந்தவளாக வாழ்ந்து இறைவனின் இதயத்தைத் தொட்டவள்தான் கன்னி மரியாள்.

மீட்பின் சரித்திரத்திலே தன்னைப் பற்றிக்கொண்டு தன்னிடமிருந்து அனைத்து வரங்களையும் பெற்றுக்கொள்ள இருகரம் விரித்து தனது மக்களை இறைவன் அழைத்த வண்ணமாயிருந்தார். ஆனால் கன்னிமரியாள் மட்டும் கடவுளை கண்டடைந்தார். அதுவும் தன்னுடைய வாழ்வால் தனது கற்பால் தனது ஏழ்மையால் தனது கீழ்படிதலால் இறைவனை அடைந்தார். அதற்காக கடவுள் அவருக்கு அளித்த பரிசு இறைத்தாய்மை. அப்படிப்பட்ட அந்த தாய் தான் பெற்றெடுத்த திருமகனுக்கு இயேசு எனும் பெயரிட்டார். இயேசு என்றால் கடவுளின் மீட்பு என்று பொருள்படும். கடவுளின் மீட்பு என்பது கடவுள் கன்னிமரியிடமிருந்து பிறந்தார் என்பதை பெயர் சூட்டு விழா சுட்டிக்காட்டி அவ்விழா கன்னிமரி கடவுளின் தாய் இறைவனின் அன்னை என்பதை ஊரறிய உலகறியச் செய்கிறது.

அந்தக் கடவுளின் தாயைப்போல நாமும் கடவுள் விரும்புகின்ற தாயாக தந்தையாக வாழ வேண்டுமெனில் வாக்கு வடிவிலே நம்மோடு உறையக்கூடிய இறைமகனை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அந்த வாக்கை - இறைவார்த்தையை விவிலியத்தை நாம் நம்முடைய வாழ்வில் அடையாளம் காணும் போது நாமும் கூட ஒரு வகையிலே கடவுளை இந்த உலகிற்குப் பெற்றெடுத்துக் கொடுக்கும் தாய்மை நிலையை அடைந்தவர்களாவோம்.

— ஆமென்



# கடவுளின் தாய் புனித கன்னி மரியா மற்றும் புத்தாண்டு 2023

எண்.6:22-27, கலா. 4:4-7, லூக். 2:16-21

**01-01-2023**

**திருப்பலி முன்னுரை**



**பா. சேவியர்**
திண்டுக்கல்

நாங்கள் பாவத்திற்கு அடிமைகள் அல்ல. கடவுளின் பிள்ளைகள் என்ற உரிமைப் பேறு கொண்ட அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் கடவுளின் தாய் புனித கன்னி மரியா பெருவிழா மற்றும் புத்தாண்டு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

புலர்ந்திட்ட இப்புத்தாண்டை இறையன்னையின் ஆசியோடு தொடங்க தாயாம் திருச்சபை நம்மை அழைக்கிறது. தூய கன்னி மரியாள் இறைவனின் அன்னை என்ற சத்திய வாக்குதான் புலர்ந்திடும் புத்தாண்டின் நுழை வாயில்.

மரியன்னை அழகின் முழுமை, அருளின் நிறைவு, மாசு படிந்த மனித குலத்தின் மாசகற்ற வந்த புதுப்புனல். அப்படிப்பட்ட கடவுளின் தாயைப் பின்பற்றி இறைத் திட்டத்திற்கு நம்மை முற்றிலும் கையளித்து, இறையருளைப் பெற்று வாழ இன்றைய வழிபாடு வழிகாட்டுகிறது.

பாதுகாப்பு, அருள், அமைதி ஆகிய மூன்று ஆசிகளை புத்தாண்டு பரிசாக இறைவன் இன்றைய வழிபாட்டு வழியாக நமக்கு வழங்குகிறார். மரியாளைப்போல் தாழ்ச்சி, பொறுமை, கீழ்படிதல், நம்பிக்கை, பேரன்பு, அர்ப்பணிப்பு என்ற அறுங்குணங்களையும் நாமும் பின்பற்றி வாழவும், இறைவார்த்தைகளையும், வாழ்க்கை நிகழ்வுகளையும் உள்ளத்தில் நிறுத்தி சிந்திக்கவும் நாம் அழைக்கப்படுகிறோம்.

காலம் இன்று மீண்டும் தன்னை தோல் உரித்துக்கொள்கிறது. புதிய ஆண்டு என்ற புத்தாடையை அணிந்து உற்சாகத்தோடு தன் பயணத்தை தொடங்குகிறது. இந்த பூமிப் பந்து சூரியனைச் சுற்றி தன் அடுத்த சுற்றுப் பயணத்தை தொடங்குகிறது. இன்று இந்த புவனமே தன்னைப் புதுப்பித்துக்கொண்டு கண் விழிக்கிறது.

கடந்த கால அனுபவங்கள் கற்றுத் தந்தவை ஏராளம். அனுபவத்தின் சாரமெல்லாம் நெஞ்சில் ஆழமாய் விழுதுவிட, அனுபவத்தின் கசடெல்லாம் மண்ணுக்குள் புதைபட, துன்பங்கள், துயரங்கள், வாட்டும் நோய்களெல்லாம் கற்பூரமாய் கரைய, இன்பங்கள் கற்கண்டாய் இனிக்க, புவி ஈர்ப்பு விசை மீறி, முகம் காட்டி சிரிக்கும் காட்டுப் பூவாய் மானுடம் மட்டுமே மேலோங்கி நிற்க, நம் கனவுகள் எல்லாம் மெய்ப்பட இத்திருப்பலி வழியாக இறையருளை வேண்டுவோம். கரும்பான இனிப்போடும், களிப்பான நினைவோடும் புலர்கின்ற புத்தாண்டை மலர் தூவி வரவேற்போம்.

## முதல் வாசக முன்னுரை

மோசே வழியாக இஸ்ரயேல் மக்களுக்கு ஆண்டவர் வழங்கிய ஆசியுரையே இன்றைய முதல் வாசகம். இந்த சிறப்பு ஆசீரையே நம் தாய் திருச்சபை புத்தாண்டு பரிசாக நமக்கு வழங்கியுள்ளது. ஆண்டவரது ஆசீர் பாதுகாப்பைக் கொடுக்கிறது. அமைதியைத் தருகிறது. அருளைப் பொழிகிறது என்பதை விளக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

காலம் கனிந்தபோது இறைவன் தன் மகனை ஒரு பெண்ணிட மிருந்து பிறக்கச் செய்தார். திருமகன் இயேசுவின் பிறப்பு நமக்கும் அவருக்கும் இடையே ஒரு சகோதர உறவையும், நமக்கும் கடவுளுக்கும் இடையே தந்தை பிள்ளை என்ற குடும்ப உறவையும் வழங்கியுள்ளது என்பதை பவுலடியார் இவ்வாசகத்தின் வழியே எடுத்துரைக்கிறார். நாமனைவரும் கிறிஸ்துவின் உடன் பிறவா சகோதரர்கள் என்ற உயர்ந்த நிலையை பறைசாற்றும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்டு மகிழ்வோம்.

## மன்றாட்டுகள்

1. அருளையும் நலன்களையும் பொழியும் அன்பு இறைவா, உம் திருஅவையை வழி நடத்த உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவரையும் உம் திருபாதம் அர்ப்பணிக்கின்றோம். அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருப்பணிகளை திறம்பட நிறைவேற்றவும், மக்களை நேரிய வழியில் வழி நடத்தவும் அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆசி தந்து அருள் வழங்கும் அன்பு இறைவா, இப்புதிய ஆண்டில் எங்கள் குடும்பங்களில் சமாதானம் நிலவவும், அன்பும் அமைதியும் நிலைக்கவும், பகைமைநீங்கி அன்பும் பாசமும் பிரவாகமாய் பொங்கிப் பெருகவும், நோய்கள் நீங்கி நலம் பெறவும், தீமைகள் எங்களை அணுகாது, துன்பங்கள் எங்களை நெருங்காது கோட்டையாகவும் அரணாகவும் இருந்து எங்களை காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பும் கருணையும் இரக்கமும் நிறைந்த இறைவா, இப்புதிய ஆண்டை எமக்குத் தந்தமைக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். இப்புதிய ஆண்டில் எங்களின் வாழ்வாதாரங்கள் வளம் பெறவும், எங்கள் இல்லங்களில் நடைபெற வேண்டிய நல்ல காரியங்கள் எவ்வித தடையும் குறையுமின்றி சிறப்புடன் நடைபெறவும், எங்கள் குடும்ப உறவுகள் வலுவடைந்து மேம்படவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. உண்மையின் ஊற்றாகிய இறைவா, எங்களை ஆண்டு வழி நடத்தும் எம் நாட்டுத் தலைவர்களுக்காக உம்மை மன்றாடுகிறோம். அவர்கள் நேர்மையாளர்களாகவும், மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாகவும், சுயநலமில்லாதவர்களாகவும் வாழ அருள் தாரும். அவர்கள் நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும் அயராதுழைக்க அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும் ஞானத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறிச் சிந்தனைகள்

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



## குறள் – 26

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

### குறள் விளக்கம்

செய்வதற்கு அருமையான செயல்களை செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்ய மாட்டாதவர் சிறியோர்.

### சிந்தனை

இக்குறளைக் குறித்து பரிமேலழகர் தனது உரையில், ஒருவர் துறவியாக இருந்தாலும் கூட அவர் சிறப்பான காரியங்களை செய்யாவிடில் அவர் பெரியவர் அல்ல என்கிறார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாவதற்கு முன்பு ஆபிரகாம் லிங்கன் வழக்கறிஞராகத் திகழ்ந்தார். அவர் புகழ்பெற்ற வழக்கறிஞராக விளங்கியதற்குக் காரணமே அவரது நேர்மை உணர்வுதான். உண்மைக்குப் புறம்பான எந்த வழக்கையும் ஏற்பதில்லை என்பதில் உறுதியாக இருந்தார். காரணம் கேட்டபோது உண்மையில்லை என்று தெரிந்த ஒரு வழக்கை நான் வாதத்துக்கு ஏற்றால், ஒவ்வொரு விநாடியும், 'நான் பொய்யன்' என்பதை என் மனசாட்சி உரக்கச் சொல்லிக் கொண்டிருக்கும் என்றார். நேர்மையான செயல்களை மட்டும் செய்ததால் ஆபிரகாம்லிங்கன் அகிலமே நினைவு கூறும் பெரியவர் ஆனார்.

திருமுழுக்கு யோவான் பல புதுமைகளை செய்யவில்லை. காடுகளில் வாழ்ந்தார். இருப்பினும் நேர்மையானவராக இருந்தார். தவறுகளை தைரியமாக சுட்டிக்காட்டினார். மனிதராய்ப் பிறந்தவர்களுள் யோவானைவிடப் பெரியவர் ஒருவருமில்லை லூக் 7:28. இவ்வாறு இயேசு அவரை பெரியவர் என்று நற்செய்தியில் அறிமுகம் செய்தார்.

கடவுள் மேல் சிறிய நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் பெரிய காரியங்களை செய்ய வல்லவராய் இருப்பர் என்கிறது வேதாகமம். ஆனால் பெரிய நம்பிக்கை கொண்டிருப்பவர் சிறிய காரியங்களைச் செய்தால் அவர் பெரியவர் அல்ல. இதனையே, பெருமைக்குரியோராய் இல்லாதிருந்தும், தம்மைப் பெரியவர் எனக் கருதுவோர் தம்மையே ஏய்த்துக் கொள்ளுகின்றனர் கலா 6:3 என்கிறார் புனித பவுல். யார் பெரியவர்? என்ற சீடர்களின் கேள்விக்கு உங்கள் எல்லோரிலும் சிறியவரே பெரியவர் ஆவார் என்கிறார் இயேசு. மேலும் உங்களுள் பெரியவர் சிறியவராகவும் ஆட்சி புரிபவர் தொண்டு புரிபவராகவும் மாற வேண்டும் என்கிறார். தன்னைத் தாழ்த்துவோர் உயர்வடைவர் நேர்மையால் தன்னை அணிசெய்வோரே பெரியவர். நேர்மையான செயலே அரிய செயல் என உணர்வோம்.



சகோதரி. ரோசி. காங்கேயம்,
புனித காணிக்கை அன்னை சபை.

# சமூகமும்... சட்டமும்...

எங்கும் அநீதி எங்கும் நீதிக்கு அச்சுறுத்தல் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியாதது, நமது நாட்டின் தலைவிதியின் கேலிக்கூத்து. மனுஸ்மிருதியில் பழங்காலத்திலிருந்தே மேற்கோள் காட்டப்பட்டுள்ளது – இந்து சமுதாயத்தில் பெண்கள் எப்போதும் மற்றொருவரின் பாதுகாப்பில் வாழ்கிறார்கள். இதனால் அவளுடைய சுதந்திரம் எப்போதும் மீறப்படுகிறது. அவள் இளமைப் பருவத்தில், அவள் தந்தையாலும், திருமணம் முடித்தபின் தன் கணவராலும், கணவர் இறந்தபின் அல்லது கைவிடப்பட்ட நிலையில் மகனாலும் பாதுகாக்கப்படுகிறாள். நம் சமூகத்தில் பெண்ணின் தத்துவார்த்த மற்றும் நடைமுறை நிலைக்கு இடையே கொட்டாவி விடுகின்ற இடைவெளி உள்ளது. இதுவே இன்று எல்லா மதத்தவராலும் பின்பற்றக்கூடிய எழுதப்படாத சட்டமாக, சமூகத்தின் வழக்காக மாறியுள்ளது இந்த மனுஸ்மிருதி . எல்லா மூலைகளிலிருந்தும் இந்த முயற்சிகள் இருந்தபோதிலும, சடங்குகள், சம்பிரதாயங்கள் மற்றும் கலாச்சாரம், பண்பாடு என்ற பெயரில் பெண்களை சுற்றித்தான் இன்று பலவிதமான மத நிகழ்வுகள் , சுப காரியங்கள் மற்றும் துக்க நிகழ்வுச் சடங்குகள் நடத்தப்படுகின்றன. பெண்ணின் மாண்பு இன்று சின்னபின்னமாக்கப்பட்டு உருக்குலைந்த நிலையில் பல்வேறு விதமான வன்முறைகளை அவள் குடும்பத்திலும் சமூகத்திலும் சந்திக்கிறாள்.

இன்று லோக்சபா செயலகத்தின் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (2022) பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து கொண்டுதான் இருக்கிறது. இருந்தபோதிலும் சட்டம் பற்றிய விழிப்புணர்வு சமூகத்தை காப்பாற்ற வழிவகுக்கும் என்ற நம்பிக்கையில் சட்டத்தைப்பற்றி பகிர்கின்றேன்.

### இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 375, 376

பிரிவு 375-ன்படி ஒரு பெண்ணின் சம்மதமின்றி அவளுடன் உடலுறவு கொள்வது கற்பழிப்பு ஆகும். அவளது விருப்பத்திற்கு எதிராக – பரவலாக நடப்பது, குற்றவாளி தனத மேலான உடல் பலத்தைக் கொண்டு உடலுறவு கொள்வது. அவளது ஒப்புதல் இன்றி – எதிர்ப்பைக் காட்டுவதில் பயனில்லை என்பதால் எதிர்ப்புக் காட்டாமல், ‘ஆனால் அவ்வுறவிற்கு எதிராக இருக்கும் போது, அது கற்பழிப்பாகும். பதினாறு வயதுக்குட்பட்டவளாக இருக்கும்போது ஒப்புதல் அளித்தாலும், அளிக்காவிட்டாலும் மேலும் அவனது மனைவியாக இருந்தாலும் குற்றமாகும்.

அவளது ஒப்புதலுடன், அவ்வொப்புதல் அவன் தன்னைக் கொன்றுவிடக் கூடும் அல்லது காயமேற்படுத்தக் கூடும் அல்லது அப்பெண்ணுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு ஆபத்து விளையும் என்ற பயத்தில் தரப்பட்ட

ஒப்புதலாக இருந்தால், உதாரணமாக தனியாக வசிக்கும் பெண்ணிடம் எதிர்ப்பு தெரிவித்தால் கொலை செய்து விடுவேன் என மிரட்டி உடலுறவு கொண்டால், அவள் ஒப்புதல் அளிந்திருந்தாலும் அது கற்பழிப்பாகும்.

போதையுடன் அல்லது மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் பெண் ஒப்புதல் தந்திருந்தாலும் குற்றமாகும். கணவன் என்று நம்பவைத்து உறவு கொள்வது குற்றமாகும். தான் கைது செய்யப்படக்கூடும் என்ற அச்சத்தில் சம்மதம் தெரிவித்தால் அது சம்மதமாக கருதப்படமாட்டாது.

காவல்துறை அதிகாரி ஒருவர் தனது அல்லது தன் துணை அதிகாரியின் பாதுகாவலில் உள்ள பெண்ணிடம், பொது ஊழியர் தன் பாதுகாப்பிலுள்ள பெண்ணிடம் அல்லது சிறை அதிகாரி, விடுதி காப்பாளர் முதலியோர் அங்குள்ள பெண்ணுடன் உடலுறவு கொள்ளுதல் குற்றமாகும். மேற்கண்ட சூழ்நிலைகளில் பெண் சம்மதம் தெரிவித்திருந்தாலும் அது முறையான சம்மதமாக கருதப்படமாட்டாது. பெண் ஒப்புதல் தரவில்லை என தனது வாக்குமூலத்தில் கூறினால் இந்திய சாட்சியச் சட்டம் 114 (அ)-ன்படி அவ்வாறே அனுமானம் செய்து கொள்ளலாம்.

## வழிமுறைகள் (Procedure)

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CRPC) பிரிவு 327ன் படி, தனித்த அறைக்குள் பாலியல் வன்முறை குறித்த விசாரணையை நடத்தலாம். மேலும், பாதிக்கப்பட்ட பெண்ணின் எதிர்காலம் கருதி ஊடகங்களில் செய்திகள் வெளியிடுவதை தடை செய்யலாம்.

ஓரிடத்தில் குற்றம் நடந்தால் (எவ்வளவு துரிதமாக இயலுமோ) உடனே அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகார் செய்ய, தன்னை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். முடிந்த அளவு ஆடை அணிகலன்களை மாற்றாது தன்னையும் சுத்தம் செய்து கொள்ளாமல் புகார் கொடுக்கச் செல்ல வேண்டும்.

பாதிக்கப்பட்டவர் மற்றும் குற்றவாளியினுடைய மருத்துவப் பரிசோதனை உயர்ந்த உறுதிப்படுத்து சான்றுகள் தரக்கூடியதாகும். எனவே பாதிக்கப்பட்டவரது சம்மதம் பெற்றுத்தான் பரிசோதனை செய்யப்படும் என்றாலும், அப்பெண் இதனை மறுக்கவோ, இச்சந்தர்ப்பத்தை இழந்து விடவோ கூடாது.

எதிரியை கட்டாய மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். சில சந்தர்ப்பங்களில் எதிரி கூட தான் குற்றவாளி அல்ல என நிரூபிக்க தன்னை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தக் கோரலாம்.

பிரிந்து வாழும் மனைவியுடன் பலவந்தமாக உடலுறவு கொள்வது இரண்டு வருட சிறை தண்டனை மற்றும் அபராதம் வழங்கக் கூடிய குற்றமாகும்.

இந்திய தண்டனைச் சட்டம் தவிர வேறு சில குற்றவியல் சட்டங்களும் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் இயற்றப்பட்டுள்ளன. இவற்றில் குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், ஆபாசத் தடைச் சட்டம், வரதட்சணை தடுப்புச்சட்டம் என்பன குறிப்பிடத்தக்கன.

## திருமணம்

கணவன் ஒரு மனைவி உயிருடன் இருக்கும் போதே வேறு திருமணம் செய்து கொண்டால், இ.த.ச. 494ன் படி குற்றமாகும். விவாகரத்து பெற்றால் மட்டுமே மறுமணம் செய்து கொள்ள முடியும், அப்படி விவாகரத்து பெறாமல் மறுமணம் செய்து கொண்டால் குற்றம். இதற்கு 7 வருடம் சிறையும் அபராதமும் வழங்கப்பட்டுள்ளது.

## மானக் குறைவு

ஒரு பெண்ணின் மனதை புண்படுத்தும் வகையில் சத்தம் எழுப்புவதோ, சைகை செய்வதோ, உட்கருத்துடன் எதையும் செய்வதோ இ.த.ச. பிரிவு 509ன் படி ஒரு குற்றம். இதற்கு ஓராண்டு சிறைத் தண்டனை அல்லது 10 ஆயிரம் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

## ஆபாசத் தடைச் சட்டம் 1956

இளைஞர்களைத் தவறான வழிகளில் செலுத்தும் வகையான வெளியீடுகளைத் தடை செய்ய இச்சட்டம் இயற்றப்பட்டது.

படங்கள், வெளியீடுகள் மூலமாக, குற்றம் வன்முறை கொடுஞ் செயல்கள், மனதை மாசுபடுத்தும் வகையான நிகழ்வுகளை இளைஞர்கள் மத்தியில் பரப்புவது, அவர்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்கின்றன. எனவே, அவ்வாறான வெளியீடுகள் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்திய அரசியலமைப்பு, 243D, இது பெண்களுக்கான சிறப்பு ஏற்பாடு மற்றும் அவர்களின் பாதுகாப்பைப் பற்றி வெளிப்படையாகப் பேசுகிறது. வீடுகளை உருவாக்குவது ஆண்தான், ஆனால் வீட்டை உருவாக்குவது பெண் என்பதை மக்கள் உணர வேண்டும். எனவே பெண்கள் மதிக்கப்பட வேண்டும்.



# இறைவனின் அன்னையாகிய
# தூய கன்னி மரியா பெருவிழா

01.01.2023
முதல்
08.01.2023

**01.01.2023 – ஞாயிறு – புத்தாண்டுப் பெருவிழா**
முதல் வாசகம் : எண்ணிக்கை 6:22-27
இரண்டாம் வாசகம் : கலாத்தியிர் 4:4-7
நற்செய்தி : லூக்கா 2:16-21

**02.01.2023 – திங்கட்கிழமை**
முதல் வாசகம் : 1 யோவான் 2:22-28
நற்செய்தி : யோவான்1:19-28

**03.01.2023 – செவ்வாய்கிழமை**
முதல் வாசகம் : 1 யோவான்2:29-3:6
நற்செய்தி : யோவன் 1:29-34

**04.01.2023 – புதன்கிழமை**
முதல் வாசகம் : 1 யோவான் 3:7-10
நற்செய்தி : யோவான் 1:35-42

**05.01.2023 – வியாழக்கிழமை**
முதல் வாசகம் : 1 யோவான் 3:11-21
இரண்டாம் வாசகம் : யோவான் 1:43-51

**06.01.2023 – வெள்ளிக்கிழமை**
முதல் வாசகம் : 1 யோவான் 5:5-6, 8-13
நற்செய்தி : மாற்கு 1:7-11

**07.01.2023 – சனிக்கிழமை**
முதல் வாசகம் : 1 யோவான் 5:14-21
நற்செய்தி : யோவான் 2:1-12

**08.01.2023 – ஞாயிற்றுக்கிழமை**
**ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா**
முதல் வாசகம் : எசாயா 60:1-6
இரண்டாம் வாசகம் : எபேசியர் 3:2-3அ, 5-6
நற்செய்தி : மத்தேயு 2:1-12



Arise, soldiers of Christ, throw away the works of darkness and put on the armor of light.

- St. Cecilia -

# நலம் தரும் இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலக்கல்வி..!

## அகத்திக் கீரையில் அடங்கியுள்ள சத்துக்களும் அதன் பயன்களும்...!

சித்த மருத்துவம் அகத்திக் கீரையில் 63 வகைச் சத்துகள் இருப்பதாக கூறுகிறது. இம்மரத்தின் பல பகுதிகள் மூலிகையாகப் பயன்படுகின்றது.

அகத்திக் கீரையில் 8.4 விழுக்காடு புரதமும், 1.4 விழுக்காடு கொழுப்பும், 3.1 விழுக்காடு தாது உப்புகளும், இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர்.

மேலும் அகத்திக்கீரையில் மாவுச் சத்து, இரும்புச் சத்து, வைட்டமின் (உயிர்ச்சத்து) ஏ ஆகியவையும் உள்ளன. அகத்திக் கீரையை சாறுடன் சிறிதளவு தேன் கலந்து நீர்க்கோவை பிடித்துள்ள குழந்தைகளுக்கு உச்சித் தலையில் தடவினால் குணமாகும்.

காயங்களுக்கு இலையை அரைத்துப் போட புண்கள் ஆறும். அகத்திக் கீரையை சாப்பிடுபவர்களுக்கு பித்த சம்பந்தமான நோய்கள் நீங்குவதுடன் உணவு எளிதில் ஜீரணமாகும்.

வாரத்திற்கு ஒரு முறையாவது அகத்திக்கீரை சாப்பிட்டு வர உடல் உஷ்ணம் குறைந்து கண்கள் குளிர்ச்சி பெரும். அகத்தி கீரையில் சுண்ணாம்பு சத்து அதிகமாக இருப்பதால் அது பல் மற்றும் எலும்பு வளர்ச்சிக்கு உதவுகிறது.

இலைகளை உலர்த்தி பொடி செய்து காலை மாலை இருவேளை பாலில் அரைக் கரண்டி அலவு கலந்து குடித்து வந்தால் வயிற்றுவலி குணமாகும்.

தொண்டை புண் தொண்டை வலி ஆகியவை உள்ளவர்கள் அகத்தி கீரையை பச்சையாக மென்று சாப்பிட்டால் விரைவில் தொண்டை பிரச்சனை குணமாகும்.

அகத்தி கீரை வயிற்றில் உள்ள புழுவை கொல்லும் மேலும் மலச்சிக்கலைத் தீர்க்கும். உயர்ந்த இரத்த அழுத்த பிரச்சனை இருப்பவர்கள் வாரத்திற்கு ஒருமுறையாவது அகத்தி கீரையை உணவில் சேர்த்து கொண்டால் இந்த பிரச்சனையிலிருந்து விடுபடலாம்.

தொண்டை வலி மற்றும் குடல் புண் பிரச்சனையை சரி செய்ய அகத்திக் கீரை பயன்படுகிறது. மதிய வேளையில் இதை சாப்பிட்டு வந்தால் அல்சர் மற்றும் உடலில் உள்ள பித்தம் குறையும். அகத்திக் கீரையை வாரம் ஒரு முறை சாப்பிட்டுவர உடல் உஷ்ணம் குறையும். கண்கள் குளிர்ச்சியாகும்.

நீராடைப்பு பித்த மயக்கம் குணமாகும். சிறுநீர் தடையில்லாமல் போகும். அகத்திக் கீரையை வெயிலில் காய வைத்து பொடியாக்கி பாலில் கலந்து குடித்தால் மார்பில் ஏற்படும் வலி முற்றிலுமாக குறையும். அகத்திக் கீரையை தொடர்ந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டு வந்தால் நினைவாற்றல் அதிகரிக்கும். பார்வை தெளிவாகும்.



நன்றி உறவுகளே...
என்றும் உங்கள் அன்பு சகோதரன்
ஜே. அன்புரோஸ்
நலநெறியாளன்
தொடர்பு எண் : 9360456063



இறைஇயேசுவில் பிரியமான
ஞான ஒலி இணைய வார இதழ் வாசகர்களே,
உங்கள் அனைவருக்கும் இனிய

**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.**

அருட்பணி. **சைமன் பீட்டர்**

